WEB COPY

BEFORE THE MADURAI BENCH OF MADRAS HIGH COURT

DATED : **30.11.2021**

CORAM

**THE HON'BLE MR. JUSTICE M.SUNDAR**

**W.P(MD)No.8154 of 2012**
**and W.M.P.(MD)Nos.2 to 4 of 2012**

1.K.Chelladurai Servai
2.P.Lakshminana Chettiar
3.A.Bharathi Chettiar
4.M.Vellaichamy Ambalam
5.P.Manickam ... Petitioners

Vs.

1.The Secretary to Government,
Hindu Religious and Charitable Endowment Department,
Fort St. George,
Chennai.

2.The Commissioner,
Hindu Religious and Charitable Endowment,
Chennai - 34.

3.The Joint Commissioner,
Hindu Religious and Charitable Endowment,
Sivagangai.

4.The Executive Officer,
Arulmigu Muthumariamman Thirukoil,
Kotoor,
Periyakarai Post,
Devakottai Taluk,
Sivagangai District. ... Respondents

**PRAYER:** Petition filed under Article 226 of the Constitution of India, for the issuance of a Writ of Certiorarified Mandamus, calling for the records relating to the impugned order vide Na.Ka.No.14472/2012/A2 dated 12.04.2012 passed by the 2nd respondent read with impugned notice bearing Na.Ka.No.1281/2012/Aa1 dated 07.05.2012 passed by the 3rd respondent and quash the same and consequently direct the 2nd respondent to approve the petitioners as trustees of Arulmigu Muthumariamman Temple, Kotoor, Periyakarai Post, Devakottai Taluk, Sivagangai District.

For Petitioner : Mr.S.Anwar Sameem
For Respondents : Mr.M.Lingadurai,
Special Govt. Pleader for R1 to R3

No appearance for R4

https://hcservices.ecourts.gov.in/hcservices/

WEB COPY

**O R D E R**

Read this in conjunction with and in continuation of earlier proceedings made in the previous listing on 09.11.2021, which is as follows:

> *'Mr.S.Anwar Sameem, learned counsel for the five writ petitioners, Mr.M.Lingadurai, Government Advocate (civil side) on behalf of respondents 1 to 3 and Mr.Veeravel Pandian, learned counsel representing Mr.Gunaseelan Muthiah, counsel for fourth respondent (Executive Officer) are before this Court.*
>
> *2. Learned counsel for writ petitioners requests for an adjournment citing difficulty at his end. Likewise, learned counsel for fourth respondent also requests for an adjournment citing difficulty for the arguing counsel.*
>
> *3. Owing to the requests of writ petitioner's counsel and counsel for fourth respondent, this matter is adjourned.*
>
> *4. List three weeks hence.*
>
> *5. List on 30.11.2021.'*

2. Mr.S.Anwar Sameem, learned counsel for writ petitioners 2 to 5 (to be noted, this Court is informed that first writ petitioner is no more) and Mr.M.Lingadurai, learned Special Government Pleader on behalf of respondents 1 to 3 are before this Court. Fourth respondent Executive Officer of the temple concerned has entered appearance through a learned private counsel (Mr.J Gunaseelan Muthiah) his name is shown in the cause list but there is no representation.

3. Be that as it may, captioned writ petition pertains to appointment of trustees qua a public temple viz., 'Arulmigu Muthumariamman Temple, situate in Kotoor, Periyakarai Post, Devakottai Taluk, Sivagangai District' (hereinafter 'said temple' for the sake of convenience and clarity).

4. Learned State Counsel submits that pending writ petition trustees were appointed vide G.O.Ms.No.78 Tourism, Culture and Religious Endowments Department dated 19.07.2018, they elected Trust Board Chairman from amongst themselves and two years therefrom also had elapsed meaning the tenure of the trustees has also elapsed. Learned State Counsel submits that thereafter further notification dated 22.10.2020 bearing reference Na.Ka.No.4160/2020/Aa1 has also been issued regarding appointment of trustees afresh.

5. Scanned reproduction of G.O.Ms.No.78 Tourism, Culture and Religious Endowments Department dated 19.07.2018 and the notification dated 22.10.2020 bearing reference Na.Ka.No.4160/2020/Aa1 are as follows:

https://hcservices.ecourts.gov.in/hcservices/

WEB COPY



சுருக்கம்

இந்து சமய அறநிலையத்துறை – சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், கோட்டூர், அருள்மிகு முத்து மாரியம்மன் திருக்கோயில் – திருக்கோயில் நிர்வாகத் திட்டத்தின்படி 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையக்கொடைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) பிரிவு 47 (3) (a) காப்புரையின்படி அரசு நியமனம் (Nomination) மூலம் கூடுதலாக பட்டியல் முறை வழியாக அறங்காவலர்கள் – நியமனம் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி3-1) துறை

அரசாணை (நிலை) எண். 78

நாள்: 19.07.2018,
விளம்பி வருடம், ஆடி-3,
திருவள்ளுவர் ஆண்டு 2049.

படிக்கப்பட்டது:

இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் கடித ந.க. எண்.31639/2017/அ2, நாள் 26.03.2018.

ஆணை:

இந்து சமய அறநிலையத்துறை ஆணையர், மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், கோட்டூர், அருள்மிகு முத்து மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையக்கொடைகள் சட்டப்பிரிவு 46(iii)-ன் கீழ் பட்டியலைச் சேர்ந்த நிர்வாகத்திட்டம் உள்ள திருக்கோயிலாகும் என்றும், இத்திருக்கோயிலுக்கு அறங்காவலர்கள் நியமனம் செய்வது தொடர்பாக மதுரை, துணை ஆணையர் ஓ.ஏ.141/1975, நாள் 12.09.1979 மற்றும் சிவகங்கை இணை ஆணையர் ஓ.ஏ.14/2011/இ1, நாள் 15.10.2013-ன்படி ஏற்படுத்தப்பட்ட நிர்வாகத் திட்டத்தின்படி கோட்டூர் கிராமத்தைச் சேர்ந்த கோனார், செட்டியார் மற்றும் கள்ளர் ஆகிய 3 சமுதாயத்திலிருந்து 5 அறங்காவலர்கள் நியமனம் செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது எனவும், அதன்படி மேற்படி சமுதாயத்தினரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள 5 விண்ணப்பதாரர்களின் விண்ணப்பத்தினை சரக ஆய்வாளரால் பரிசீலிக்கப்பட்டு அளித்துள்ள அறிக்கையின் அடிப்படையிலும், நிர்வாகத்திட்டம் ஏற்படுத்தப்பட்ட திருக்கோயிலுக்கு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டப்பிரிவு 7A(5)-ன்படி மாவட்டக் குழுவின் மூலம் அறங்காவலர்கள் நியமனம் செய்திட விலக்களிக்கப்பட்டுள்ளதையடுத்து, 1959 ஆம் வருடத்திய இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959, திருத்தப்பட்ட சட்டம் 39/96 மற்றும் தமிழ்நாடு சட்டம் 15/2006 பிரிவு 47(3) (a) (ii)-ன்கீழ் ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி கீழ்க்காணும் மூன்று நபர்களை ஆணையரின் செயல்முறை உத்தரவு ந.க.எண் 31639/2017/அ2-1, நாள் 26.03.2018 உத்தரவு மூலம் பட்டியல் முறை வழியாக

https://hcservices.ecourts.gov.in/hcservices/

WEB COPY

அறங்காவலர்களாக நியமனம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளதாக ஆணையர் தெரிவித்துள்ளார்:-

1) திரு. கே.ஆர். காளிமுத்து வேளார்,
த/பெ. கருப்பையா வேளார்,
(வேளார் சமுதாயம்)

2) திரு. வி.வெள்ளையப்பன் செட்டியார்,
த/பெ. விஸ்வநாதன் செட்டியார்,
(செட்டியார் சமுதாயம்)

3) திரு. வி. அரவிந்தன் செட்டியார்,
த/பெ. விஸ்வநாதன் செட்டியார்,
(செட்டியார் சமுதாயம்)

2. மேலும், மேற்படி திருக்கோயிலின் நிர்வாக நலன் கருதி, சட்டப்பிரிவு 47(1) (எ) காப்புரையின் கீழ் அரசின் "நாமினேஷன்" மூலம், கீழ்க்காணும் இரண்டு நபர்களை, இத்திருக்கோயிலுக்கு கூடுதல் பரம்பரை முறை வழிசாரா அறங்காவலர்களாக நியமனம் செய்து ஆணை வழங்குமாறு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்:-

1) திரு. எஸ். முடியரசன், த/பெ. சடையப்பன்,
(கள்ளர் சமுதாயம்)
3/666, மேலத்தெரு, கோட்டூர், பெரிய காரை அஞ்சல்,
தேவகோட்டை வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

2) திரு. எஸ். முத்துக்கருப்பன், த/பெ. மாயாண்டி,
(கள்ளர் சமுதாயம்)
3/623, கீழத்தெரு, கோட்டூர், பெரிய காரை அஞ்சல்,
தேவகோட்டை வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு நபர்கள் இந்து சமய அறநிலைக்கொடைகள் சட்டம் 1959, சட்டப்பிரிவு 26(1)-ன்கீழ் தகுதியின்மை இல்லாதவர்கள் எனத் தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட சூழ்நிலையில், இந்து சமய அறநிலையத் துறை ஆணையரின் பரிந்துரையினை ஏற்று, சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், கோட்டூர், அருள்மிகு முத்து மாரியம்மன் திருக்கோயிலுக்கு, அத்திருக்கோயிலின் நிர்வாகத் திட்டத்தின்படி, இந்து சமய அறநிலைக்கொடைகள் சட்டம் 1959, சட்டப்பிரிவு 47(1) (a) காப்புரையின் கீழ் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கீழ்க்கண்ட இரண்டு நபர்களை கூடுதல் பரம்பரை முறை வழிசாரா அறங்காவலர்களாக அரசாணையில் நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது:-

1) திரு. எஸ். முடியரசன், த/பெ. சடையப்பன்,
3/666, மேலத்தெரு, கோட்டூர், பெரிய காரை அஞ்சல்,
தேவகோட்டை வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

https://hcservices.ecourts.gov.in/hcservices/

WEB COPY

3

2) திரு எஸ். முத்துக்கருப்பன், த/பெ. மாயாண்டி,
3/623, கிழக்குத்தெரு, கோட்டூர், பெரிய காரை அஞ்சல்,
தேவகோட்டை வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

4. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக்கொடைகள் சட்டம், சட்டப்பிரிவு 48-ன்படி தேர்ந்தெடுக்கப்படும் அறங்காவலர்கள் தங்களுக்குள் ஒரு தலைவரை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். நியமனம் செய்யப்படும் அறங்காவலர்கள் அறங்காவலர் குழுத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் நாளிலிருந்து இரண்டு ஆண்டு காலம் பதவி வகிப்பார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வ வர்மா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்:-
திரு. எஸ். முடியரசன், த/பெ. சடையப்பன், 3/665, மேலத்தெரு, கோட்டூர், பெரிய காரை அஞ்சல், தேவகோட்டை வட்டம், சிவகங்கை மாவட்டம்.
திரு எஸ். முத்துக்கருப்பன், த/பெ. மாயாண்டி, 3/623, கிழக்குத்தெரு, கோட்டூர், பெரிய காரை அஞ்சல், தேவகோட்டை வட்டம், சிவகங்கை மாவட்டம்.
(ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை-34 வழியாக)
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை-34.
இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சிவகங்கை.
உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, பரமக்குடி.
✓செயல் அலுவலர், அருள்மிகு முத்து மாரியம்மன் திருக்கோயில், கோட்டூர், தேவகோட்டை வட்டம், சிவகங்கை மாவட்டம்.
நகல்:-
மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9.
கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/உ.திரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

[signature] 15.02.18
பிரிவு அலுவலர்

https://hcservices.ecourts.gov.in/hcservices/

WEB COPY



தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை
சிவகங்கை இணை ஆணையர் மண்டல அலுவலகம்
சிவகங்கை.

**ந.க.எண்:4160 /2020/ஆ1, நாள் 22.10.2020 .**

## அறிவிப்பு

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், கோட்டூர், அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலுக்கு மதுரை துணை ஆணையர் ஒ.எ.141/1975 நாள் 12.03.1979 மற்றும் சிவகங்கை இணை ஆணையர் ஒ.எ.எண்.14/2011/இ1, நாள் 15.10.2013 உத்தரவில் ஏற்படுத்தப்பட்ட நிர்வாகத் திட்டத்தின்படி, கோட்டூர் கிராமத்தில் உள்ள இந்து சமயத்தைச் சார்ந்த கள்ளர் சமுதாயத்தில் இருந்தும், செட்டியார் சமுதாயத்தில் இருந்தும், வேளாளர் சமுதாயத்தில் இருந்தும் அறங்காவலர்களாக நியமிக்கப்படுவதற்காக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்களை நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்தும் இவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட 30 தினங்களுக்குள் (25.11.2020)–க்குள் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ சிவகங்கை, இந்து சமய அறநிலையத்துறை, இணை ஆணையர் அலுவலகத்திற்கு வந்து சேருமாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. நிர்ணயிக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவங்களை சிவகங்கை இணை ஆணையர் அலுவலகம், பரமக்குடி உதவி ஆணையர் அலுவலகம், திருவாடானை ஆய்வாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

2. விண்ணப்பம் செய்து கொள்ளும் தேதியன்று விண்ணப்பதாரர் வயது 25–க்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

3. இந்து சமய அறநிலையத்துறை சட்டவிதி 26–ல் தகவின்மை குறித்து சொல்லப்பட்டுள்ள குறைபாடுகள் எவையேனும் உள்ளவர்கள் நியமனம் செய்யப்பட அருகதையற்றவர்கள் ஆவார்கள். ஆதலின் அவர்கள் விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டியதில்லை. அதன்படி,

   அ. ஒழுக்கக் கேடு சம்மந்தமான குற்றத்துக்காக ஒரு குற்றவியல் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பெற்று அத்தகைய தண்டனை மாற்றப்பெறாமல் அல்லது மேற்படி குற்றம் மன்னிக்கப்பெறாமல் உள்ளவர்கள்.

   ஆ. கடனிருக்கச் சக்தியற்றவரென்று நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டவர்கள் அல்லது அவ்வாறு தீர்மானிக்கப்பட வேண்டுமென விண்ணப்பம் செய்து கொண்டவர்கள்.

   இ. யாதொரு கோயிலில் அறங்காவலராக ஏற்கனவே இருந்து நிர்வாகக் குழுவினால் அல்லது மேற்படி சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட அதிகாரிகளால் நீக்கி விடப்பட்டவர்கள்.

   ஈ. ஒரு அறங்காவலரின் அலுவல்களை நிறைவேற்றவும், கடமைகளைச் செய்யவும், இயலாதவண்ணம் சித்த சுவாதீனமற்ற நிலை, மனக்கோளாறு அல்லது அங்கக் கோளாறு, தொழுநோய் அல்லது அருவருக்கத்தக்க யாதொரு நோயால் பாதிக்கப்பட்டவர்கள்.

https://hcservices.ecourts.gov.in/hcservices/

WEB COPY

..2..

உ. அறநிலையத்தின் அக்கறைகளுக்கு விரோதமாகச் செயலாற்றி இருப்பவர்கள். மேற்படி கோவிலுடன் இணைக்கப்பட்டுள்ள கட்டளைகளின் அறங்காவலராக இருப்பவர்கள்.

ஊ. மத்திய அரசின் பணியிலிருந்தோ அல்லது மாநில அரசின் பணியிலிருந்தோ அல்லது உள்ளாட்சி மன்றங்களின் பணியிலிருந்தோ நீக்கப்பட்டவர்கள்.

எ. அறநிலையத்தின் சார்பாக அல்லது அறநிலையத்திற்கு எதிராக வாதிடும் பெறும் வழக்கறிஞராக அமர்த்தப்பட்டவர்கள்.

ஏ. அறநிலையத்தின் குத்தகைதாரராகவோ அல்லது வேறு உடன்படிக்கையில் பற்றுள்ளவர்களாகவோ அல்லது அறநிலையத்தில் நடைபெறும் யாதொரு வேலையில் பாத்தியதை உடையவராகவோ அல்லது அறநிலையத்திற்கு யாதொரு வகையிலும் சேர வேண்டிய தொகையை பாக்கி வைத்திருப்பவர்களாகவோ உள்ளவர்கள்.

ஐ. இந்து சமயத்தினை பின்பற்றாதவர்கள்.

ஒ. அரசு நிறுவனங்கள், அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தனி நிறுவனங்கள், அரசு சார்பான நிறுவனங்களில் பணிபுரிவோராக இருக்கக் கூடாது.

ஒம்/-ரு.தனபால்,
இணை ஆணையர்.

/உண்மைநகல்உத்தரவுப்படி/

மேலாளர்.

பெறுநர்:

1–2. செயல் அலுவலர்,
அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில்,
கோட்டூர், தேவகோட்டை வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

3–4. ஆய்வர், இந்து சமய அறநிலையத்துறை, திருவாடானை.
(இந்த அறிக்கையை ஆலயத்தின் முன் கதவில் ஒட்டி பிரசுரம் செய்து அதற்கான அத்தாட்சி அனுப்பக் கேட்டுக் கொள்ளப்படுகிறது)
சார்பு செய்து அத்தாட்சி பெறும் பொருட்டு

5–6. ஊராட்சி மன்றத் தலைவர், திருவேகம்பத் பஞ்சாயத்து, தேவகோட்டை, வட்டம்.
(விளம்பரம் செய்து அத்தாட்சி அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது)

7–8. கிராம நிர்வாக அலுவலர், கோட்டூர் (அலுவலக விளம்பரப் பலகையில் பிரசுரித்து அத்தாட்சி அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது)

9–10. உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, பரமக்குடி.
(அலுவலக அறிவிப்பு பலகையில் பிரசுரித்து அறிக்கை அனுப்ப வேண்டும்)

நகல் பணிந்தனுப்பப்படுகிறது.

11. திருமிகு ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34.
(அலுவலக விளம்பர பலகை)

12. இவ்வலுவலக விளம்பர பலகை.

13. மிகை.

https://hcservices.ecourts.gov.in/hcservices/

6. The above draws the curtains on the captioned matter as trustees have since been appointed and their tenure has also elapsed. Recording the aforementioned stated position, the captioned writ petition is disposed of as closed. Though obvious it is made clear that this Court has not expressed any view or opinion on the merits of the matter in this order. Consequently, connected captioned miscellaneous petitions are also disposed of as closed. There shall be no order as to costs.

Sd/-

Assistant Registrar (CS-II)

// True Copy //

/ /2021
Sub Assistant Registrar(CS)

vsm

**Note :** In view of the present lock down owing to COVID-19 pandemic, a web copy of the order may be utilized for official purposes, but, ensuring that the copy of the order that is presented is the correct copy, shall be the responsibility of the advocate / litigant concerned.

To

1.The Secretary to Government,
Hindu Religious and Charitable
Endowment Department,
Fort St. George,
Chennai.

2.The Commissioner,
Hindu Religious and Charitable Endowment,
Chennai – 34.

3.The Joint Commissioner,
Hindu Religious and Charitable Endowment,
Sivagangai.

+1 CC to M/s.spl.GP ( SR-36715[F] dated 1/12/2021 )

**W.P(MD)No.8154 of 2012**
**30.11.2021**

_RD(20.12.2021) 8P 5C

https://hcservices.ecourts.gov.in/hcservices/